**ஜூலை – 17**

# TNPSC துளிகள்

- இரயில்வே பாதுகாப்புப் படையின் (RPF) முதல் பெண் தலைமை இயக்குநராக மூத்த இந்தியக் காவல் பணி (IPS) அதிகாரி சோனாலி மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.
- செவ்வாய்க் கிரகத்தில் கால் பதிக்கும் முதல் மனிதர்களில் ஒருவராக வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் உள்ள 24 வயதான அமெரிக்காவின் அலிசா கார்சன் அனைத்து நாசா விண்வெளி பயிற்சி முகாம்களையும், மேம்பட்ட விண்வெளி பயிற்சித் திட்டங்களையும் நிறைவு செய்துள்ளார்.
- கலாச்சாரத் துறை அமைச்சகமானது, இந்தியாவின் அரசியல், கலாச்சார, கல்வி மற்றும் தொழில் துறை மேம்பாட்டிற்கு டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி ஆற்றியப் பங்களிப்புகளுக்காக அவரது 125வது பிறந்தநாளை முன்னிட்டு இரண்டு ஆண்டு காலக் கொண்டாட்டத்தைத் தொடங்கியது.
- லடாக்கின் துணை நிலை ஆளுநராக கவிந்தர் குப்தா, கோவாவின் ஆளுநராக அசோக் கஜபதி ராஜூ மற்றும் ஹரியானாவின் ஆளுநராக ஆஷிம் குமார் கோஷ் ஆகிய மூன்று முக்கிய நியமனங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ஒரு முதன்மையான சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியான எரிசக்தி சேமிப்பு வாரம் (IESW) ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- இமாச்சலப் பிரதேச மாநிலமானது கல்வி அமைச்சகத்தின் 2025 ஆம் ஆண்டு தேசிய சாதனை கணக்கெடுப்பில் (NAS) குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து, 2021 ஆம் ஆண்டில் இருந்த 21வது இடத்தில் இருந்து முன்னேறி தேசிய அளவில் முதல் ஐந்து இடங்களுக்கு உயர்ந்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## உங்களுடன் ஸ்டாலின் திட்டம்




- தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சிதம்பரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தைத் தொடங்கினார்.
- இந்தத் திட்டமானது விண்ணப்பங்களை வீடுகளில் வழங்கி, மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறது.

- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக மொத்தம் 10,000 முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும்.
- நகரத்தில் இல்லாதவர்கள், அல்லது இந்த வசதி கிடைக்கப் பெறாதவர்கள் அல்லது பிற முன்னெடுப்பு முகாம்களைப் பற்றி அறியாதவர்களும் இதனால் பயனடைவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தென்னை மர நோயைச் சமாளிக்கப் பருவநிலை உணரிகள்




- தமிழ்நாட்டில் மிகவும் முதல் முறையாக, பொள்ளாச்சியில் (கோயம்புத்தூர் மாவட்டம்) தென்னை மர விவசாயிகள் அதிகரித்து வரும் வேர் வாடல் நோய் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பயிர்களின் உகந்த திறனை மதிப்பிடுவதற்கு என்று நிகழ்நேர பருவநிலை கண்காணிப்பு அமைப்புகளை நிறுவியுள்ளனர்.
- இது பெங்களூரைச் சேர்ந்த பைடெக் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.
- இந்த குறைந்த விலையிலான சூரிய சக்தியில் இயங்கும் உணரிகள் வெப்பநிலை, ஈரப்பதம், மழைப்பொழிவு மற்றும் சூரிய கதிர்வீச்சு ஆகியவற்றைக் கண்காணித்து, எதிர்காலப் பயிர் திட்டமிடல் மற்றும் பல்வகைப்படுத்தலை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்தைக் கொண்டுள்ளன.
- பைட்டோபிளாஸ்மாவால் ஏற்படுகின்ற மற்றும் வெள்ளை ஈக்கள் மற்றும் இலை தத்திப் பூச்சிகள் போன்ற நோய்க் கிருமிகளால் பரவும் வேர் வாடல் நோய் ஆனது, இப்பகுதியில் தென்னை மரங்களை கடுமையாக பாதித்துள்ளது.
- ஆனைமலை, பொள்ளாச்சி வடக்கு மற்றும் தெற்கு தொகுதிகளில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மரங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதால், ஏற்கனவே ஒரு லட்சம் மரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

# தேசியச் செய்திகள்

## e-NAM தளத்தில் 7 புதிய வேளாண் பொருட்கள்

- மத்திய அரசானது, மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM) தளத்தில் ஏழு புதிய வேளாண் பொருட்களைச் சேர்த்துள்ளது.
- அவை: கரும்பு, மார்ச்சா அரிசி, கட்டர்னி அரிசி, ஜர்தாலு மாம்பழம், ஷாஹி லிச்சி, மகஹி பான் மற்றும் பனாரசி பான் ஆகியனவாகும்.

- eNAM தளத்தில் உள்ள மொத்தத் தயாரிப்புகளின் எண்ணிக்கை தற்போது 238 ஆக அதிகரித்துள்ளது.
- இந்தியாவில் வெளிப்படையான, தரம் சார்ந்த மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வேளாண் வர்த்தகத்தினை ஊக்குவிப்பதற்காக எண்ணிம வர்த்தகத் தளமான eNAM ஆனது 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.




## மாநிலங்களவைக்குப் புதிய உறுப்பினர்கள்




- இந்திய அரசியலமைப்பின் 80(3) வது சரத்தின் கீழ் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் நான்கு புகழ்பெற்ற நபர்களை மாநிலங்களவைக்கு உறுப்பினர்களாக நியமித்துள்ளார்/பரிந்துரைத்துள்ளார்.
  - உஜ்வால் நிகம் - சட்டம் மற்றும் சமூக நீதித் துறையில் ஆற்றிய சேவை.
  - சதானந்தன் மாஸ்டர் - சமூக சேவையில் அடிமட்ட அளவிலான பணி.
  - ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா - இந்தியாவின் முன்னாள் வெளியுறவு செயலாளர்.
  - டாக்டர் மீனாட்சி ஜெயின் - இந்திய வரலாறு மற்றும் இலக்கியத்திற்கான அறிவார்ந்தப் பங்களிப்புகள்.
- 80வது சரத்தின் (1) வது பிரிவின் (a) துணைப் பிரிவின் கீழ் அமைச்சர்கள் குழுவின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரால் இந்தப் பரிந்துரைகள் மேற்கொள்ளப்

பட்டன.

- இலக்கியம், அறிவியல், கலை அல்லது சமூக சேவையில் சிறப்பு அறிவு அல்லது நடைமுறை அனுபவம் உள்ள தனிநபர்களின் 12 பரிந்துரைகளை இந்த சரத்து அனுமதிக்கிறது.
- இராஜ்யசபாவானது (மாநிலங்களவை) அதிகபட்சம் 238 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா - EFTA வர்த்தக ஒப்பந்தம்

- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கப்படவுள்ள இந்தியா-ஐரோப்பிய தடையற்ற வர்த்தக சங்கத்தின் (EFTA) வர்த்தக மற்றும் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்தினை (TEPA) சுவிட்சர்லாந்து அங்கீகரித்துள்ளது.
- TEPA ஆனது வர்த்தக தடைகளைக் குறைத்தல், சுங்க நடவடிக்கைகளை எளிமைப் படுத்துதல் மற்றும் சுவிட்சர்லாந்து மற்றும் EFTA ஏற்றுமதிகளுக்கு இந்திய சந்தைகளில் அனுமதி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- EFTA தொகுதி (ஐஸ்லாந்து, லிச்சென்ஸ்டீன், நார்வே மற்றும் சுவிட்சர்லாந்து) ஆனது 15 ஆண்டுகளில் இந்தியாவில் 100 பில்லியன் டாலர்களை முதலீடு செய்யும்.
- இந்த முதலீடு இந்தியாவில் 1 மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதுடன் இது ஒரு பெரிய பொருளாதார ஊக்கத்தைக் குறிக்கிறது.
- சுவிட்சர்லாந்து தற்போது இந்தியாவில் 12வது பெரிய முதலீட்டாளராக உள்ளது.





## ஐரோப்பிய ஒன்றியத்தின் கார்பன் எல்லை இணக்க முறைமை

- பிரிக்ஸ் நாடுகள் ஆனது ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) கார்பன் எல்லை இணக்க முறைமையினை (CBAMs) நியாயமற்றவை மற்றும் பாரபட்சமானவை என்று கூறி மிக கடுமையாக கண்டித்தன.
- CBAM என்பது பகுதியளவு கடுமையான உமிழ்வு விதிமுறைகளைக் கொண்ட

நாடுகளின் பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்படும் கார்பன் அடிப்படையிலான இறக்குமதி வரிகள் ஆகும்.

- இது 'கார்பன் கசிவை' தடுப்பதை நோக்கமாகக் கொண்டது.
- இத்தகைய ஒருதலைப் பட்ச சுற்றுச்சூழல் வர்த்தகக் கட்டுப்பாடுகள் 1994 ஆம் ஆண்டு பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டின் (UNFCCC) கொள்கைகளை மீறுவதாக BRICS அறிவித்தது.
- பிரேசிலில் நடைபெற்ற BRICS வருடாந்திர உச்சி மாநாட்டின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- வளர்ச்சியடைந்த நாடுகள் தங்கள் UNFCCC உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும், ஆண்டுதோறும் குறைந்தபட்சம் 100 பில்லியன் டாலர் பருவநிலை நிதியை வழங்க வேண்டும் என்றும், இது 2035 ஆம் ஆண்டிற்குள் 300 பில்லியன் டாலராக உயர வேண்டும் என்றும் BRICS கோரியது.
- பயனுள்ள பருவநிலை நடவடிக்கைகளுக்கு ஆண்டிற்கு 1.3 டிரில்லியன் டாலர் தேவை என்று வளர்ந்து வரும் நாடுகள் மதிப்பிடுகின்றன.
- 2025 ஆம் ஆண்டிற்குள் தகவமைப்பு நிதியை இரட்டிப்பாக்க BRICS அழைப்பு விடுத்து உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## STELLAR மாதிரி 2025


- மத்திய மின்சார ஆணையம் (CEA) ஆனது STELLAR மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- லான்டாவ் குழுமத்துடன் (TLG) இணைந்து உருவாக்கப்பட்ட இது ஆசிய மேம்பாட்டு வங்கியின் (ADB) ஆதரவில் மேற்கொள்ளபப்டுகிறது.
- STELLAR என்பது அதிநவீன, முற்றிலும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட வளங்களின் போதுமான இருப்பு நிலையினை மதிப்பிட்டு உறுதி செய்யும் மாதிரியமைப்பாகும்.
- இது முழுமையாக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் வளங்களின் போதுமான இருப்பு நிலையினை மதிப்பிட்டு உறுதி செய்யும் மாதிரியாகும்.
- இது மின் உற்பத்தி, பரிமாற்றம், சேமிப்பு மற்றும் தேவை வழங்கீடு நடவடிக்கை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த திட்டமிடலுக்கான அடுத்த தலைமுறை நுட்பத்திலான

மென்பொருள் கருவியாகும்.

❖ இது மாநிலங்கள் முழுவதும் மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் சேமிப்புத் திட்டமிடலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## BatEchoMon அமைப்பு




❖ இது இந்தியாவின் முதல் தானியங்கி வெளவால் கண்காணிப்பு, கண்டறிதல் அமைப்பு ஆகும்.

❖ நிகழ்நேர ஒலிப் பகுப்பாய்வைப் பயன்படுத்தி வெளவால் இனங்களைக் கண்டறிந்து வகைப்படுத்துவதற்காக இது வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுள்ளது.

❖ இது பெங்களூருவில் உள்ள இந்திய மனிதக் குடியேற்ற நிறுவனத்தால் (IIHS) உருவாக்கப் பட்டது.

❖ சூரிய அஸ்தமனத்தில் செயல்படத் தொடங்கும் இது வெளவால் சமிஞ்சைகளை பிரித்து காணவும் பகுப்பாய்வு செய்யவும் வேண்டி ராஸ்பெர்ரி பை நுண்செயலியை பயன்படுத்துகிறது.


❖ அறியப்பட்ட வெளவால் இனங்களுடன் சமிக்ஞையான கட்டமைப்புகளைப் பொருத்தி பார்க்க இது convolutional neural networks (CNN) எனப்படும் எந்திரக் கற்றல் மாதிரியைப்

பயன்படுத்துகிறது.

- இது நிகழ்நேர வௌவால் சமிக்ஞை பதிவு மற்றும் வகைப்பாட்டிற்கான உலகின் முதல் ஒருங்கிணைந்த அலகு ஆகும்.

## Cu-Phen துகள்

- சென்னையில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI) ஆனது, சமீபத்தில் Cu-Phen எனப்படும் சிறப்பு அம்சங்கள் கொண்ட நுண்ணிய அளவிலான துகள்களை உருவாக்கியுள்ளது.
- இது நம் உடலில் உள்ள இயற்கை நொதிகளின் செயல்பாட்டைப் பிரதிபலிக்கிறது.
- இயற்கை நொதிகளைப் பிரதிபலிக்கும் மெட்டலோ-நானோசைம்கள் அல்லது செயற்கை உயிரியக்கக் காரணிகள் எலக்ட்ரான் பரிமாற்றத்தைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டவை என்று அறிவியலாளர்கள் கண்டறிந்தனர்.
- இது செல்லுலார் ஆற்றலை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு முக்கியமான செயல்முறை ஆகும்.
- மெட்டலோ-நானோசைம்களின் இந்தப் புதிதாக அடையாளம் காணப்பட்ட பண்பு ஆனது, நிலையான ஆற்றல் உற்பத்தி, மருத்துவ கண்டுபிடிப்புகள் மற்றும் சுற்றுச் சூழல் தீர்வுகளை செயல்படுத்துவதன் மூலம் உயிரியல் அமைப்புகளில் தடையின்றி ஒருங்கிணைக்கப்படுகிறது.





## நச்சுத்தன்மை வாய்ந்த பெரோவ்ஸ்கைட் சூரிய மின்கலங்களை மறுசுழற்சி செய்தல்

- நச்சுத்தன்மை வாய்ந்த பெரோவ்ஸ்கைட் சூரிய மின்கலங்களை மறுசுழற்சி செய்வதற்காக அறிவியலாளர்கள் ஒரு பசுமையான நீர் சார்ந்த முறையை உருவாக்கி உள்ளனர்.
- இது சுமார் 99% பொருட்களை மீட்டெடுத்து ஐந்து சுழற்சிகளுக்குப் பிறகும் கிட்டத்தட்ட முழு செயல்திறனைத் தக்க வைத்துக் கொண்டது.
- இது டைமெத்தில்ஃபார்மமைடு போன்ற நச்சுத் தன்மை வாய்ந்த கரைப்பான்களின்

தேவையை நீக்குகிறது.

- ❖ இந்தச் செயல்முறையானது சோடியம் அசிடேட்டைப் பயன்படுத்தி ஈயத்தைப் பாதுகாப்பாகப் பிரித்தெடுக்கிறது, அதே நேரத்தில் சோடியம் அயோடைடு மற்றும் ஹைப்போ பாஸ்பரஸ் அமிலம் பெரோவ்ஸ்கைட் படிகங்களை மீண்டும் உருவாக்க உதவுகின்றன.
- ❖ பெரோவ்ஸ்கைட் வகை சூரிய மின்கலங்கள் பெரோவ்ஸ்கைட் கட்டமைக்கப்பட்ட சேர்மங்களைப் பயன்படுத்தும் ஒளிமின்னழுத்த சாதனங்களின் ஒரு வகையாகும்.
- ❖ இது பொதுவாக ஒளிச் சேமிப்பு செய்யும் செயலில் உள்ள அடுக்காக ஈயத்தைக் கொண்டுள்ளது.
- ❖ இது சூரிய ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துவதோடு, பசுமையான ஆற்றலுக்கான இந்தியாவின் உந்துதலை ஆதரிக்கும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## வுலார் ஏரியில் தாமரை மலர்கள்




- ❖ ஜம்மு & காஷ்மீரில் உள்ள வுலார் ஏரியில் 30 ஆண்டுகளுக்கும் மேலான கால இடைவெளிக்குப் பிறகு தாமரை மலர்கள் மீண்டும் தோன்றியுள்ளன.
- ❖ வுலார் ஏரி ஆசியாவின் இரண்டாவது பெரிய நன்னீர் ஏரியாகும்.

- பாரமுல்லா மற்றும் பந்திப்போரா மாவட்டங்களில் பரவியுள்ள இந்த ஏரி, 130 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது, மேலும் காஷ்மீர் பள்ளத்தாக்கின் மீன் உற்பத்தியில் 60% பங்கினைக் கொண்டுள்ளது.
- இது ராம்சர் உடன்படிக்கையின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள 42 இந்திய ஈரநிலங்களில் ஒன்றாகும்.

### ஜோகிராஃபெட்டஸ் மாத்தேவி

- கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் காடுகளில் ஜோகிராஃபெட்டஸ் மாத்தேவி என்ற புதிய வண்ணத்துப்பூச்சி இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த இனமானது துள்ளி வகை வண்ணத்துப்பூச்சி குடும்பத்தைச் சேர்ந்தது ஆகும் (ஹெஸ்பெரிடே).
- ஜோகிராஃபெட்டஸ் மாத்தேவி அதன் பேரினத்தில் அறியப்பட்ட 15வது இனமாகவும், இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட ஐந்தாவது இனமாகவும் உள்ளது.
- இந்தியப் பூச்சியியல் வல்லுநர் ஜார்ஜ் மாத்தேவின் நினைவாக இந்த வண்ணத்துப் பூச்சி இனத்திற்கு இப்பெயரிடப்பட்டது.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உலகின் மிகப்பெரிய சுற்றுலாப் பொருளாதாரங்கள் 2025





- உலகின் மிகப்பெரிய சுற்றுலாப் பொருளாதாரங்களின் பட்டியலில் 10 வது இடத்தில்

இருந்த இந்தியா 2025 ஆம் ஆண்டில் 8 வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

- உலகச் சுற்றுலா மற்றும் சுற்றுலாச் சபையின் (WTTC) படி, இந்தியா சுற்றுலாவில் 231.6 பில்லியன் அமெரிக்க டாலர்களை பங்களிக்கிறது.
- 2.36 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் பங்களிப்புடன் அமெரிக்கா உலகச் சுற்றுலாப் பொருளாதாரத்தில் முன்னணியில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து சீனா (1.3 டிரில்லியன் அமெரிக்க டாலர்) மற்றும் ஜெர்மனி (487.6 பில்லியன் அமெரிக்க டாலர்) உள்ளன.
- உலகளாவியப் பயண மற்றும் சுற்றுலாத் துறையானது 2023 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்திற்கு 10.9 டிரில்லியன் அமெரிக்க டாலர்களைப் பங்களித்தது, மேலும் இது 2034 ஆம் ஆண்டில் சுமார் 16 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்று கணிக்கப் பட்டுள்ளது.

## மிகவும் மாசுபட்ட நகரங்கள் 2025

- அசாம்-மேகாலயா எல்லையில் உள்ள பைர்னிஹாட் பகுதியில், 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் மிக அதிக காற்று மாசுபாடு அளவு பதிவானது.
- இந்தத் தகவலை எரிசக்தி மற்றும் தூய்மையான காற்று ஆராய்ச்சி மையத்தின் (CREA) அறிக்கை வெளியிட்டுள்ளது.
- டெல்லி 87 $\mu g/m^3$ மாசுபாட்டுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது என்பதோடு இது 40 $\mu g/m^3$ என்ற தேசியச் சுற்றுப்புறக் காற்று தரத் தரத்தை (NAAQS) விட இரண்டு மடங்கு அதிகமாகும்.
- ஹாஜிபூர், காஜியாபாத், குருகிராம், சசாரம், பாட்னா, தல்ச்சர், ரூர்கேலா மற்றும் இராஜ்கிர் ஆகியவை பிற அதிக மாசுபட்ட நகரங்கள் ஆகும்.
- அதே காலக் கட்டத்தில் ஐஸ்வால் (மிசோரம்) தூய்மையான நகரமாக தரவரிசைப் படுத்தப் பட்டது.




# விளையாட்டுச் செய்திகள்

## விம்பிள்டன் போட்டி 2025

- போலந்து நாட்டினை சேர்ந்த டென்னிஸ் வீரர் இகா ஸ்வியாடெக் அமெரிக்காவினைச் சேர்ந்த அமண்டா அனிசிமோவாவை எதிர்த்து தனது முதல் விம்பிள்டன் பட்டத்தினை

வென்று, ஒரு வரலாற்று வெற்றியைப் படைத்தார்.

- இத்தாலி நாட்டினைச் சேர்ந்த உலகின் முன்னணி வீரரான ஜானிக் சின்னர் ஸ்பெயின் நாட்டின் கார்லோஸ் அல்கராஸை வீழ்த்தி தனது முதல் விம்பிள்டன் ஆடவர் பட்டத்தை வென்றார்.
- மேலும், ஜானிக் சின்னர் விம்பிள்டன் பட்டத்தினை வென்ற முதல் இத்தாலிய வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- அமெரிக்காவின் மார்டினா நவ்ரதிலோவா, விம்பிள்டன் போட்டியில் 9 பட்டங்களுடன் அதிக மகளிர் ஒற்றையர் பட்டங்களை வென்ற சாதனையை கொண்டுள்ளார்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★